## 30.4 ஊரக மருத்துவ அலுவலர்களுக்கு காலச் சம்பளம் ஏற்ற முறையில் ஊதியம் வழங்குதல்

ஊரக வளர்ச்சி (பஅ5) துறை

அரசாணை (நிலை) எண். 16 நாள் : 29.01.1998

படிக்க :

1. அரசாணை (நிலை) எண். 803, நிதித் துறை, நாள்–26.07.90.
2. அரசாணை (நிலை) எண். 246, ஊ.வ.துறை, நாள்–15.11.96.
3. அரசாணை (நிலை) எண். 247, ஊ.வ.துறை, நாள்–15.11.96.
4. சென்னை உயர் நீதி மன்ற நடுவர் ஆயம் மேல் முறையீடு வழக்கு எண். 922/95.1036/95 மற்றும் 95/96ல் 1.2.96ல் வழங்கிய தீர்ப்பு
5. சென்னை உயர் நீதி மன்ற முதன்மை நடுவர் ஆயம் வழக்கு எண். 2007–2017, 3719 மற்றும் 5116–5118/97ல், **3.3.97**ல் வழங்கிய தீர்ப்பு.
6. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடித எண். ந.க.80288/97/ஈ3, நாள்–08.11.97.

**ஆணை**

தமிழகத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் மொத்தம் 105 முறையான ஊரக மருந்தகங்கள் (Regular Dispensaries) உள்ளன. இவற்றில் முறையாகப் பயின்ற மருத்துவ அலுவலர்கள் ('ஏ' வகுப்பு பதிவு பெற்றவர்கள்) பணியமர்த்தப்படுகின்றனர். இவர்களுக்கு ரூ.2,200–4,000/– என்ற ஊதிய விகிதத்தில் ஊதியம் வழங்கப்படுகின்றது. அவ்விதம் தகுதி பெற்ற மருத்துவர்கள் கிடைக்காத நிலையில் பி1, பி2 அல்லது சி பிரிவு பதிவு பெற்ற பரம்பரையாக சித்த, ஆயுர்வேதம் போன்ற இந்திய மருத்துவம் செய்து வரும் மருத்துவர்கள் பணியமர்த்தப்பட்டால், அவர்களுக்கு 01.10.84 முதல் ரூ.780–1385/– என்ற ஊதிய விகிதத்திலும் 01.06.88 முதல் ரூ.1820–3200/– என்ற ஊதிய விகிதத்திலும் ஊதியம் வழங்கப்படுகின்றது. இவைத் தவிர 295 ஊரக மருந்தகங்கள் (Rural Dispensaries) உள்ளன. இவைகளில் பரம்பரையாக மருத்துவம் செய்து வரும் பி1, பி2, சி பிரிவு பதிவு பெற்ற ஊரக மருத்துவர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கு மாதம் ரூ.540/– தொகுப்பூதியம் வழங்கப்படுகின்றது. முதலில் 1984 வரை பகுதி நேர மருந்தகங்களாக ஊரக மருந்தகங்கள் செயல்பட்டு வந்தன. இடையில் அவற்றிற்கும் முறையான மருந்தகங்களை போன்ற வேலை நேரம் நிர்ணயிக்கப்பட்டது. பின்னர் 1996 நவம்பர் முதல் மீண்டும் பகுதி நேர பணி நிர்ணயம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

2. நாகப்பட்டினம் மாவட்டம், மன்னார்குடி ஊராட்சி ஒன்றிய பகுதி நேர ஊரக மருத்துவ அலுவலர் டாக்டர்.ஜே.கிருஷ்ணமூர்த்தி என்பவர் அவரை பணி அமர்த்திய நாளான 11.02.1976 முதல் காலச் சம்பள ஏற்ற முறை ஊதிய விகிதம் வழங்கும்படி சென்னை உயர் நீதி மன்றத்தில் 863/89 எண்ணிட்ட நீதிப் பேராணை வழக்கு தொடர்ந்தார். மேற்படி வழக்கில் மனுதாரருக்கு 11.7.85 முதல் ஊதியம் விகிதம் பணப்பயனுடன் அளிக்கும்படி உயர் நீதி மன்றம் 08.03.1995ம் நாள் ஆணையிட்டது. 11.2.76 முதல் ஊதிய விகிதம் வேண்டும் எனக் கேட்டு டாக்டர்.ஜே.கிருஷ்ணமூர்த்தி 922/95 என்னிட்ட நீதிப் பேராணை மேல் முறையீட்டு வழக்குத் தொடர்ந்தார். மேற்குறிப்பிட்ட நீதி மன்ற ஆணையை எதிர்த்து அரசும் மன்னார்குடி ஊராட்சி ஒன்றியமும் முறையே 95/96, 1636/95 எண்ணிட்ட நீதிப் பேராணை மேல் முறையீட்டு வழக்குகளை தாக்கல் செய்தனர். மேற்படி மேல் முறையீட்டு வழக்குகளில் 01.02.1996ம் நாள் அளிக்கப்பட்ட தீர்ப்பில் டாக்டர்.ஜே.கிருஷ்ணமூர்த்திக்கு 01.10.84 முதல் ஊதிய விகிதம் அளிக்கப்பட வேண்டும் என்ற மாற்றத்துடன் 8.3.1996 நாளிட்ட தீர்ப்பு உறுதி செய்யப்பட்டது. நீதிமன்ற தீர்ப்பின்படி டாக்டர்.ஜே.கிருஷ்ணமூர்த்திக்கு காலச் சம்பள ஏற்ற முறையில் தற்பொழுது ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. இதனைத் தொடர்ந்து பல ஊரக மருத்துவ அலுவலர்கள் காலச்சம்பள ஏற்ற முறையில் ஊதியம் கோரி உயர் நீதி மன்றத்திலும் தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயத்திலும் பல வழக்குகளை தொடுத்து நிலுவையில் இருந்தன. அவைகளில் நீதிப் பேராணை வழக்கு எண். 2007–2017, 3719, 5116–5118/97ல் சென்னை உயர் நீதி மன்ற முதன்மை நடுவர் ஆயம் (First Bench) 08.08.97 தேதிய தீர்ப்பில் ஏற்கனவே 1.2.96ல் தீர்ப்பு அளிக்கப்பட்ட மேல் முறையீட்டு வழக்கு எண். 922/95 (டாக்டர்.ஜே.கிருஷ்ணமூர்த்தி மற்றும் தமிழ்நாடு அரசு) குறித்த உண்மைகள் மற்றும் சட்டம் சம்பந்தப்பட்ட வினாக்களின் அடிப்படையில், இந்த வழக்குகளும் அமைவதாக இரு தரப்பு வழக்கறிஞர்களும் கருத்து தெரிவித்துள்ளனர். எனவே பி2 மருத்துவ அலுவலர்களுக்கு வழங்கப்படும் காலச்சம்பள ஏற்ற முறை ஊதிய விகிதம் ஊரக மருத்துவ அலுவலர்களும் 01.10.84 முதல் பெறத் தகுதி உடையவர்கள் ஆவார்கள். எனவே தாக்கல் செய்த அனைத்து ஊரக மருத்துவ அலுவலர்களுக்கும் காலச்சம்பள ஏற்ற முறையில் ஊதியம் 01.10.84 முதல் வழங்கப்பட வேண்டும். இவ்வுத்திரவு பிறப்பித்த நான்கு மாதங்களுக்குள் இதனை செயல்படுத்த வேண்டும். இது பற்றி ஒவ்வொரு ஊரக மருத்துவ அலுவலரும் தனித்தனியே நீதிமன்றத்தினை அணுக தேவையில்லை. தகுதி உடைய அனைத்து ஊரக மருத்துவ அலுவலர்களுக்கும் இப்பயனை வழங்க வேண்டும் என்று ஆணையிட்டுள்ளது.

3.சென்னை உயர்நீதி மன்ற முதன்மை நடுவர் ஆயம் வழக்கு எண். 2007–2017, 3719 மற்றும் 5116–5118/97ல் 08.8.1997 அன்று அளித்த தீர்ப்பினை அரசு கவனமாக ஆராய்ந்து சென்னை உயர் நீதி மன்ற முதன்மை நடுவர் ஆயத் தீர்ப்பினை செயல்படுத்திடல் வேண்டும் என முடிவெடுத்துள்ளது. அரசின் இந்த முடிவின்படி ஊரக மருத்துவ அலுவலர்களுக்கு 01.10.1984 முதல் ரூ.780–1385 என்ற ஊதிய விகிதத்திலும் 01.06.88 முதல் ரூ.1820–3200 என்ற விகிதத்திலும் காலச் சம்பளம் ஏற்ற முறையில் ஊதியம் வழங்கப்பட வேண்டும். எனவே சென்னை உயர் நீதி மன்ற முதன்மை நடுவர் 08.08.97 அன்று வழக்கு எண். 2007–2017, 3719, 5116–5118/97ல் வழங்கியுள்ள தீர்ப்பினை ஏற்று ஊரக மருத்துவ அலுவலர்களுக்கு 01.10.1984 முதல் ரூ.780–35–1025–40–1385/– என்ற ஊதிய விகிதத்திலும் 01.06.88 முதல் ரூ.1820–60–2300–75–3200/– என்ற விகிதத்திலும் காலச்சம்பளம் ஏற்ற முறையில் ஊதியம் வழங்கப்பட வேண்டும் என அரசு தற்போது ஆணையிடுகின்றது.

4.ஊரக மருத்துவ அலுவலருக்கு 1.10.84 முதல் வழங்கப்பட வேண்டிய ஊதிய நிலுவைத் தொகையினை ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் இருந்து தவணை முறையில் வழங்குமாறும் தவணைகளின் எண்ணிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஊராட்சி ஒன்றிய பொது நிதி இருப்பை பொறுத்து தீர்மானிக்குமாறு அரசு ஆணையிடுகிறது.

5.இந்த ஆணை நிதித் துறையின் 36/இசெ/ எஸ்.கே.எஸ் எண்ணும் 28.01.1998 நாளும் இட்ட அலுவல் சார்பற்ற குறிப்பில் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்